

# தலைவர் கலைஞர்

## 70-வது பிறந்ததின விழா

## முரசொலி சிறப்பிதழ்

3/6/93

# உயர்வுக்குக் காரணம் உழைப்பு... உழைப்பு!

எத்தனையோ பேர் பிறந்தார்கள்- பிறக் கிறார்கள். அவர்களுக்கெல்லாம் விழாவா கொண்டாடுகிறோம்?

கலைஞருக்கு மட்டும் ஏன் பிறந்தநாள் விழா?

உயர்ந்த லட்சியத்தை-கொள்கையை அடிப்படையாகக் கொண்டு இளம் வயதி லிருந்தே மக்கள் தொண்டு செய்து வருபவர் கருணாநிதி. அவர் தொண்டு மக்கள் நலனுக்கு- முன்னேற்றத்திற்குப் பயன்படு கிறது. அதனால்தான் கலைஞருக்குப் பிறந்தநாள் கொண்டாடப்படுகிறது.

கலைஞர் நல்லவர்- தன்னலமற்றவர்- திறமைமிக்கவர்-காரியங்களை மிகத் திறமையோடு செய்து வருபவர். கொள்கை யில் பற்று கொண்டு-அதைப் பின்பற்றி வருபவர். இவ்வளவுக்கு அவர் உயர்ந்திருப் பதற்குக் காரணம் அவரது உழைப்புதான்.

-தந்தை பெரியார்

# தண்டவாளத்தில் தலை வைத்துப்படு என்றாலும்...

தண்டவாளத்தில் தலை வைத்துப் படு என்று சொன்னாலும்- அமைச்சராகப் பணி யாற்று என்று சொன்னாலும் இரண்டையும் ஒரேவிதமான ஆணை என்று ஏற்றுக் கொண்டு அதை நிறைவேற்றுவதில் தன் முழுத் திறமையையும் பயன்படுத்திக் கொள் பவர் தம்பி கருணாநிதி.

வண்ணமான எண்ணத்தை மிகச்சிறு பருவத்தில் பெற்றவர் தம்பி கருணாநிதி. இளமைப்பருவம்முதல் நாட்டுக்கு எதை யாவது சொல்ல வேண்டும் என்ற ஆர்வத் தோடு சில எண்ணங்களை உருவாக்கிக் கொண்டு கையேட்டுப் பிரதிகள் மூலமாகச் சொல்லி-

அதற்குப் பிறகு மேடையில் பேசுவதன் மூலமாகச் சொல்லி-கட்டுரை வடிவத்தில்- கவிதை வடிவத்தில்-நாடக வடிவத்தில்- சினிமாத்துறை மூலம் சொல்லி அந்த எண்ணங்களுக்கெல்லாம் எந்த அளவுக்கு வடிவம் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு வடிவம் கொடுத்துவருபவர் தம்பி கருணாநிதி!

-பேரறிஞர் அண்ணா

# முத்தமிழறிஞர்

**குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா**

**கலைஞரின் 'தென்பாண்டிச் சிங்கம்' வரலாற்றுப் புதினத்தை – சிறந்த வரலாற்றுப் புதினமாகத் தேர்ந்தெடுத்த தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், அப்புதினத்தை தீட்டிய கலைஞர் அவர்களுக்கு 25.5.90 அன்று ராஜராஜன் விருது வழங்கிச் சிறப்பித்தது. அந்த விழாவில் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் 'முத்தமிழறிஞர்' எனும் பட்டத்தினையும், தங்கப்பேனா ஒன்றையும் கலைஞர் அவர்களுக்கு வழங்கிச் சிறப்பித்து ஆற்றிய உரையே இது.**

அற்புதமான மாநிலத்தின் வரலாற்று சிறப்புமிக்க இந்த தஞ்சாவூரில் நடைபெறுகின்ற இந்த முக்கியமான நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்ற வாய்ப்பினை வழங்கிய தமிழக கல்வி அமைச்சர் அவர்களுக்கும், பல்கலைக் கழக துணை வேந்தர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இருபதாம் நூற்றாண்டின் மகத்தான மனிதர்களான அண்ணா அவர்களையும், காமராசர் அவர்களையும் முதலமைச்சர்களாக பெற்ற பெருமையும் அதிர்ஷ்டமும் இந்த மாநிலத்திற்கு உண்டு.

இயல் என்றும் இசை என்றும் நாடகமென்றும் மூன்று பரிமாணங்களாக வளர்ச்சி பெற்று முத்தமிழாக திகழ்வது தமிழ் மொழி மகத்துவத்திற்கு சாட்சியாகும்.

தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் அறிவாற்றல் நிறைந்தவர். எழுத்துலக அறிஞர். அவர் கவிதைகள் எழுதியிருக்கிறார். நாடகங்கள் தீட்டியிருக்கிறார். அவரது உரைநடையும் சொல்லாட்சித் திறனும் எண்ணற்ற மக்களுக்கு கருத்துக்களை எடுத்துச் சொல்லும் கருவி என்பது அனைவரும் அறிவீர்.



மிகச் சிறந்த நாடகக் கதாசிரியராக, திரைக்கதை வசனகர்த்தாவாக பெரும் புகழ் பெற்றிருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்கள் வரலாற்றுப் புதினங்களை படைத்திருக்கிறார்.

அவர் தமிழ் இலக்கியத்தின் சிரஞ்சீவி. அவரது படைப்புகள் கருவூலங்களாகத் திகழ்கின்றன. டாக்டர் கலைஞர் படைத்துள்ள ஈடு இணையற்ற "குறளோவியமும்", "சங்கத் தமிழும்" தமிழ் மொழிக்கு பெருமை சேர்க்கும் காரணத்தால், காலத்தால் அழியாத படைப்புகளாகும். என்றும் பிரகாசிக்கும்.

இவற்றை தந்த கலைஞரை தமிழக வருங்காலச் சந்ததியினர் என்றும் நினைவில் கொள்வார்கள். இன்றைய விருதுக்குரிய கலைஞரின் படைப்பான "தென்பாண்டிச் சிங்கம்" தென் தமிழ்நாட்டின் தமிழர்கள் போற்றும் வீரத்தையும், மானத்தையும், கற்பையும், ஒழுக்கத்தையும் போற்றி வந்ததை விவரிக்கும் நூலாகும்.

கலைஞரின் இன்னொரு வரலாற்று புதினமான ரோமாபுரி பாண்டியன். ரோமாபுரிக்கும் தமிழகத்திற்கும் இடையிலே நிலவிய வணிக கலாச்சார வரலாற்று தொடர்புகளை பின்னணியாகக் கொண்ட நூலாகும். மற்றொரு நூலான "பொன்னர் _ சங்கர்", தமிழ்நாட்டில் சேலம், பெரியார் மாவட்டப் பகுதிகளில் பல ஆண்டுகளுக்கு முன்பு அங்கு நிலவிய மரபுகளையும் கலாச்சாரங்களையும் விவரிப்பதாகும்.

உரைநடை கவிதை, நுண்ணிய கலைகள், நாடகத்துறை அனைத்திலும் சிறந்து விளங்கும் கலைஞரை முத்தமிழ் அறிஞர் என்று பட்டம் சூட்டி அழைக்கலாம்.

மிகச் சிறந்த அரசனும் தேர்ந்த அறிவாளனுமான ராஜராஜ சோழன் விருது கலைஞர் அவர்களுக்கு வழங்குவது மிகவும் பொருத்தமாகும்

கலைஞர் அவர்களின் இலக்கிய ஆற்றலையும், சாதனைகளையும் பெருமைப்படுத்தும் வகையில் தமிழ் பல்கலைக் கழகம் தருகின்ற ஒளி விடுகின்ற இந்த ராஜ ராஜ சோழன் விருதை வழங்குவதையும் தஞ்சையில் இன்னும் உங்களோடு இருப்பதையும் எண்ணி நெகிழ்ந்து போயிருக்கிறேன்.

சோழர்களின் மரபுக்குரிய பண்டைய புகழுக்குரிய தனித்தன்மையை சிறப்பை கலைஞர் பெற்றிருக்கிறார். பொது வாழ்க்கையில் பணியாற்றுகிறார். தலை சிறந்த இலக்கிய படைப்பாளியாக காட்சியளிக்கிறார். மிகவும் தகுதி வாய்ந்த இந்த விருது அவருக்கு வழங்குவதில் நான் மிகுந்த ஆனந்தம் அடைகிறேன்.

மக்கள் பணியில் மென்மேலும் புகழ் பெறவு' தொடர்ந்து கலைஞர் மேலும் வெற்றிகளை பெற. எனது உள்ளார்ந்த பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கும் என்னுடைய பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்ற வகையில் ராஜஸ்தானிலிருந்து கொண்டுவரப்பட்ட – இந்தியப் பெண்மணியின் எழிலைச் சித்தரிக்கின்ற இந்த அற்புதமான ஓவியத்தை – ஒருங்கிணைந்த உணர்வுப்பூர்வமான ஒருமைப்பாட்டை நினைவுபடுத்துகின்ற வகையில் நான் இந்தப் பல்கலைக் கழகத்திற்கு வழங்குவதோடு வடக்கும், தெற்கும், கிழக்கும், மேற்கும் ஒன்றுபட்டு திகழட்டும் என்று வாழ்த்துகிறேன்.

இந்த அற்புதமான நாவலை வழங்கிய தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு ஒரு விருதினை என் சார்பில் வழங்கிட விரும்புகிறேன். அது இந்தப் பேனா. இந்த எழுதுகோலை முதலமைச்சருக்கு அளிப்பதிலே நான் மகிழ்ச்சியோடு இந்த பேனாவைக் கொண்டு அவர் இன்னும் ஏராளமாக எழுதவேண்டும் என்ற வாழ்த்தினையும் தெரிவித்து அவருக்கு இந்த பேனாவையும் பரிசாக அளிக்கின்றேன்.

## நீர் பல்லாண்டு வாழ்க!



அஞ்சுகத்தின் புதல்வரே!
அன்னை மொழியின் காவலரே!
எங்கள் இதயவேந்தே!
நீர் பல்லாண்டு வாழ்க!

**சுப.தங்கவேலன்**
செயலாளர்
இராமநாதபுரம் மாவட்டம்

## வாழ்க பல்லாயிரத்தாண்டு!



தமிழினத்தின் தலைமகனே!
எங்கள் இதய தெய்வமே!
வாழ்க நீ பல்லாண்டு!

**எம்.ஏ.காதர்**
தலைமை செயற்குழு உறுப்பினர்
இராமநாதபுரம்

## நீர் பல்லாண்டு வாழ்க!



70-வது அகவை காணும் ஆருயிர்
அண்ணனே! தமிழினத்தின் காவலனே!
இதய வேந்தே! நீர் பல்லாண்டு
நலமுடன் வாழ வாழ்த்துகிறோம்!

**வெற்றிலைப்பேட்டை ஜின்னா**
**மு-காதர்பிச்சை**
**கே-முருகேசன்**
**ந-முகமது பஷீர்**
**கம்பம் சாகுல் ஹமீது**
மதுரை மாநகர்.

## பல்லாண்டு வாழ்க!

ஆந்திரத்திற்கோர்
தேவராயனைப் போல்
கன்னடத்திற்கோர்
ஹைதர் அலியைப் போல்
கேரளத்திற்கோர்
வேலுத்தம்பியைப் போல்
தமிழகத்தின் கலை, கலாச்சாரம்
காத்து கழகத்தை வழி நடத்தும்
அண்ணன்

**கலைஞர்** அவர்களே

நீங்கள் நீடுழி வாழ வாழ்த்துகிறேன், வணங்குகிறேன்.

தங்கள் அன்புத் தம்பி
**பசும்பொன் தா.கிருட்டிணன்**
எம்.ஏ.,எம்.பி.
மற்றும் மாவட்ட தி-மு-கழகம்
பசும்பொன் தேவர் மாவட்டம்

# கலைஞரின் சேவை இந்தியாவுக்கு தேவை!

முன்னாள் குடியரசுத் தலைவர் நீலம் சஞ்சீவரெட்டி அவர்கள், நெருக்கடி நிலை பிரகடனத்துக்குப் பிறகு கலைஞர் அவர்களிடம் நெருங்கிப் பழகியவர். கலைஞரின் அறிவாற்றலை-அரசியல் ஆளுமையை-அயரா உழைப்பை- கொள்கைப் பிடிப்பை பல சமயங்களில் அருகிலிருந்து அறிந்தவர்.

1989-ம் ஆண்டு ஜூன் திங்கள் 3-ஆம் நாளன்று சென்னை சீரணி அரங்கத்தில் நடைபெற்ற கலைஞரின் 66-வது பிறந்த நாள் விழாக் கூட்டத்தில் கலந்து கொண்டு கலைஞரைச் சிறப்பித்து சஞ்சீவரெட்டி அவர்கள் ஆற்றிய உரை இது

-முன்னாள் குடியரசுத் தலைவர் சஞ்சீவரெட்டி

சென்னை சீரணி அரங்கில் நடைபெற்ற முதல்வர் கலைஞர் அவர்களின் 66-வது பிறந்த நாள் விழா பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு முன்னாள் குடியரசுத் தலைவர் நீலம் சஞ்சீவரெட்டி பேசியதாவது-

உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

டாக்டர் கருணாநிதி என்னுடைய நெருங்கிய நண்பர்களிலே ஒருவர். அவர் எப்படி உங்களுக்கு நெருங்கிய நண்பர் என்று கேட்கலாம். ஆதிகாலத்திலிருந்து அவர் எனக்கு நெருங்கிய நண்பர் அல்ல. எமர்ஜென்சி (நெருக்கடி நிலைமை) காலத்தில் நானும் அவரும் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. இரவு பகலாக எமர்ஜென்சி நேரத்திலே சந்தித்துப் பேசியிருக்கிறோம்.

இன்றையதினம் நான் ஒரு ஓய்வுபெற்ற குடியரசுத் தலைவர். ஓய்வு பெற்ற குடியரசுத் தலைவர் என்பதால் நான் எந்தக் கட்சியையும் சார்ந்தவன் அல்ல. ஏறத்தாழ ஏழாண்டுகளுக்கு முன்பு நான் ஓய்வு பெற்றேன். அதற்குப் பிறகு நான் அரசியலிலே ஒதுங்கி நிற்கிறேன். ஆனால் ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது தான் முதன் முறையாக இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒரு பொதுக் கூட்டத்திலே பேசினேன். டாக்டர் கருணாநிதி என்னைவிட பத்தாண்டு காலம் இளையவர். நான் சுதந்திரப் போராட்ட நேரத்திலே ராஜாஜி, சத்திய மூர்த்தி ஆகியோரோடு பழகியிருக்கிறேன் காமராஜரோடு பழகியிருக்கிறேன்.

அந்த நாட்களிலே ராஜாஜி, சத்தியமூர்த்தி, காமராஜரோடு சிறைச்சாலையிலே ஒன்றாக இருந்திருக்கிறேன். அதற்குப் பிறகு எங்களை எல்லாம் முதலில் இருந்த இடத்தைவிட்டு மாற்றி அமராவதி சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு சத்தியமூர்த்தி அவர்களுக்கு உடல் நலக்கோளாறு ஏற்பட்டது. அதன் காரணமாக அவரை விடுதலை செய்தார்கள். ஆனால் விடுதலையான சில நாளிலேயே மறைந்துவிட்டார்.

அதற்குப் பிறகு ராஜாஜி வெகு நாட்கள் வாழ்ந்தார். அந்த நேரம் ஒருமுறை நான் மக்களவையில் சபாநாயகராக இருந்தபோது சென்னைக்கு வந்திருந்தேன். சென்னையில் இருக்கிற கவர்னர் மாளிகைக்கு சென்று தங்கியிருந்தபோது அங்கு ராஜாஜி அவர்களையும் அண்ணா அவர்களையும், டாக்டர் கருணாநிதி அவர்களையும் சந்திக்கின்ற வாய்ப்பு ஏற்பட்டபோது, அண்ணாவும், டாக்டர் கருணாநிதி அவர்களும் அருகருகே தான் அமர்ந்திருந்தார்கள். அப்போது ராஜாஜி என்னிடம் அறிமுகப்படுத்தி வைக்கும் போது, டாக்டர் கருணாநிதியை காட்டி இவர் தான் தமிழ்நாட்டின் வருங்கால முதலமைச்சர் என்று அப்போதே ராஜாஜி எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

அப்போதே ராஜாஜி அவர்கள், கருணாநிதி மிகவும் சிறந்தவர். கண்ணியமானவர் பிரகாசிக்கப்போகிறவர் என்பதை அறிந்து வைத்திருந்தார். ராஜாஜியைப்பற்றி உங்களுக்குத் தெரியும். அவரை, உடம்பெல்லாம் மூளையைப் பெற்றவர் என்று சொல்வதுண்டு. 1942-ல் நடைபெற்ற காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் பாகிஸ்தானை பிரித்துக் கொடுத்து விடலாம் என்று மகாத்மா காந்தியோடு மிகவும் தீவிர மாக வாதிட்டவர். அத்தகைய ராஜாஜி கலைஞரைப்பற்றி அப்போது அவ்வாறு குறிப்பிட்டார்.

நான் சொல்வதெல்லாம் பழைய வரலாறு. நாற்பதாண்டுகளுக்கு முன் இந்த சென்னை மண்ணிலே வாழ்ந்த மாபெரும் மகத்தான மனிதர்களாகிய ராஜாஜி, சத்தியமூர்த்தி, காமராஜ், ஆந்திராவில் பிரகாசம் - இவர்களோடு பொது வாழ்க்கையிலே ஈடுபட்டிருக்கிறேன். இருந்தாலும் நான் ஓய்வுபெற்ற குடியரசுத் தலைவர் என்ற முறையிலே அரசியல் பேசக் கூடாது என்றாலும் நான் இங்கு வந்திருப்பதற்குக் காரணமே டாக்டர் கருணாநிதி அவர்களை வாழ்த்துவதற்காகத் தான். அவர் மிகவும் என்னிடத்திலே அன்பு கொண்டவர். அது மட்டுமல்ல; இந்த நாட்டிற்கு பல நல்லது செய்திருக்கிறார். அது மட்டுமல்ல; எமர்ஜென்சியை எதிர்த்து தமது முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்ய முன்வந்தவர். அந்த அளவுக்கு எமர்ஜென்சியை எதிர்த்து நாட்டிற்கு அரும்பணி ஆற்றியவர் என்பதற்காகத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன்.

டாக்டர் கருணாநிதி அவர்கள் இன்னும் 90 வயதிற்கு மேல் நிச்சயமாக வாழ்வார். அதே நேரத்தில் அவர் தமிழ்நாட்டிற்கு மட்டும் தொண்டாற்றுவது மாத்திரமல்ல; அவருடைய சேவை இந்தியாவுக்கே தேவை. அது மட்டுமல்ல; அவருக்குக் கருணாநிதி என்று பெயர் வைத்த அவரது தாய் மிக அருமையான பெயரை வைத்திருக்கிறார். 'கருணை' உள்ள அந்தப் பெயர் கொண்ட அவர், அவரது பெயருக்கு ஏற்றவாறு கருணை பொங்கி வழியவேண்டும். அவருடைய இந்த மாநில மக்களுக்கு மட்டுமல்ல; இந்திய மக்களுக்கே அவரது கருணையால் நன்மைகள் கிடைக்க வேண்டும்.

★

# பல நூறு ஆண்டுகள் நலமோடு வாழ்க!

எழுபதாம் ஆண்டில் அடி எடுத்து

வைக்கும் எழுஞாயிறே! தமிழர்களின்

ஒரே காவல் அரணே! ஒண்டமிழே!

# கலைஞர் அவர்களே!

தமிழ் போல் இளமையாய்...

அமிழ்து போல் இனிமையாய்...

பல நூறு ஆண்டுகள் நலமோடு வாழ்க!



**ஆர்.சிவராமன்**

முன்னாள் தொண்டரணி அமைப்பாளர்

பசும்பொன் மாவட்ட தி.மு.க.

# அண்ணா அளித்த அற்புதத் தலைவர்

-பொருளாளர் சாதிக்

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடி – என்ற புகழுக்கு உரிய இனம் தமிழினம்"

என்று வரலாறு பெருமையோடு போற்றுகிறது.

"சங்ககாலம்" தமிழர்களின் பொற்காலம் என்று உலக நாகரிக மக்கள் ஒப்புக் கொள்கிறார்கள்.

ஐயாயிரம் ஆண்டு வரலாறு தமிழர்க்கு உண்டு என்று பறை சாற்றப்படுகிறது.

உலக மொழிகளில் ஆறு மொழிகளே செம்மையானவை என்றும், அவற்றில் ஒன்றுதான் தமிழ்மொழி என்றும் மொழிநூல் அறிஞர்கள் ஒப்புகிறார்கள்.

உயர்தனிச் செம்மொழியான தமிழ் மொழிக்குச் சொந்தக்காரன் 'தமிழன்' என்பதை எண்ணி உலகம் பெருமையோடு ஏற்றுக் கொள்கிறது.

சுதந்திர நாடுகளான மலேசியா, சிங்கப்பூர், இலங்கை போன்ற நாடுகளில் இனிய தமிழ்மொழி ஆட்சிமொழியாக அரியாசனம் ஏறியுள்ளது.

உலகில் பல்வேறு சின்னஞ்சிறு தீவுகளில் தமிழர்கள் உயர்வோடு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

ஆனால் தாய்த் தமிழகத்தில் தமிழர்களின் நிலை என்ன? நம்முடைய நாட்டில் தமிழ்மொழியின் தரம் என்ன?

எண்ணிப் பார்ப்பின் வேதனையைத் தவிர வேறில்லை.

நானூறு ஆண்டுகளுக்கு முன்னாலே போர்ச்சுக்கீசியரும், பிரெஞ்சுக்காரர்களும், பின்னர் ஆங்கிலேயரும் இந்தியாவிற்கு வந்து வாணிகம் செய்யத் தொடங்கினர்.

இவர்கள் பள்ளிகளைத் தொடங்கினர்; கல்வியைப் பரப்பினர். மருத்துவமனைகளைத் திறந்தனர்; நோயுற்றவர்களுக்கு மருந்துகள் கொடுத்து உதவினர்.

இந்தியாவின் ஒரு பகுதியில் பிரெஞ்சு மொழி பயிற்றுவிக்கப்பட்டது.

நாட்டின் பெரும் பகுதியில் ஆங்கில மொழியைக் கற்பிக்கத் தொடங்கின.

கோவா, டையூ, டாமன் ஆகிய பகுதிகள் போர்ச்சுக்கீசியர் வசமாயின.

பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹே, ஏனாம் ஆகிய பகுதிகள் பிரெஞ்சுக்காரர்கள் வசமாயின.

இவை தவிர்த்த ஏனைய அனைத்து இந்தியப் பகுதியையும் ஆங்கிலேயர் ஆளத் தொடங்கினர்.

நாட்டில் சுதந்திரப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. நாம் காந்தியடிகள் தலைமையில் விடுதலை பெற்றோம்.

அந்நியர் இந்தியாவை விட்டு வெளியேறினர். அடிமைத்தளையில் கட்டுண்டுக் கிடந்த மக்கள் சுதந்திரமாக உலவினர்.

எனினும் நாம் பொருளாதாரச் சுதந்திரம் பெற்றோமோ? மொழிச் சுதந்திரம் அடைந்தோமா?

இன்று நாட்டில் பெரு முதலாளிகளின் ஆதிக்கமே மேலோங்கியுள்ளது. இவர்களின் கைப்பாவையாக காங்கிரசுக் கட்சி, பாரதீய ஜனதா கட்சி போன்ற கட்சிகள் செயல்பட்டு வருகின்றன.

என்றுமில்லாத நிலையில் இந்தி மொழி ஆதிக்கம் தலைதூக்கி நிற்கிறது. தாய்மொழி தமிழைத் தாழ்த்தவும், அடிமைப்படுத்தவும் இந்தி மொழி ஆதிக்கம் செலுத்துகிறது.

இந்தியாவின் தேசிய மொழிகளாக பதினேழு மொழிகள் அரசியல் சட்டத்தில் இடம் பெற்றிருந்தாலும், காலப்போக்கில் ஆட்சி மொழி அந்தஸ்து இல்லாத தமிழ்மொழி போன்ற மற்ற மொழிகள் அடிமை மொழிகளாக ஆக்கப்பட்டு விடும்.

இதுகாறும் ஆண்டு வந்த ஆங்கில மொழிக்குப் பதிலாக இந்தி மொழி அதன் இடத்தில் அமர்ந்துவிடும்: ஆதிக்கம் செலுத்தும். மொழிகளும் அழியத் தொடங்கும்: அந்தந்த மொழியைச் சார்ந்த தேசிய இனங்களும் அடிமைகளாகும்: அழியத் தொடங்கும்.

இத்தகைய பேரபாயத்தை எண்ணுகின்ற போக்கு இந்தியாவின் எந்த மாநிலத்திலும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆட்சி மொழியாக வந்துள்ள இந்தி மொழிக்கு தமிழகம் தவிர்த்து அனைத்து மாநிலங்களும் சிவப்புக் கம்பளம் விரித்து சிறப்பு செய்து வருகின்றன.

வீரம் செறிந்த மேற்கு வங்காளம் கூட இதற்கு விதிவிலக்கில்லை. விளைவைப் பற்றிச் சிந்திக்கும் போக்கு வங்காளிக்குக் கூட இல்லையே என்ற அரசியல் வித்தகர்கள் அங்கலாய்க்கிறார்கள்.

இந்தி மொழி ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்த தமிழகத்தில் கடந்த ஐம்பத்தைந்து ஆண்டுகளாக தந்தை பெரியார் தலைமையில் தொடங்கிய போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மொழிப் போரில் தளபதியாகப் பொறுப்பேற்று இந்தி மொழி ஆதிக்கத்தைக் கடுமையாக எதிர்த்து வந்தார்.

1965–இல் பேரறிஞர் அண்ணா அவர்கள் வழிகாட்ட தலைவர் கலைஞர் அவர்கள் தளபதி பொறுப்பை ஏற்று மொழிப் போரில் தீவிரமாக ஈடுபட்டார்.

தமிழகம் தழுவிய அளவில் மொழிப் புரட்சி வெடித்தது. கல்லூரி, பள்ளி மாணவர்கள் ஆயிரக்கணக்கில் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துப் போர்க் கொடி உயர்த்தினர்.

ஆட்சியாளரின் அடக்கு முறைக்கு – துப்பாக்கிச் சூட்டிற்கு நூற்றுக்கணக்கான இளைஞர்கள் பலியாயினர்; ஆயிரக்கணக்கான மாணவர்களும் பொதுமக்களும் போலீசாரின் தடியடிக்கு ஆளாயினர். எனினும் மொழிப்போர் வென்றது.

இதன் விளைவாக இந்தி ஆதரவாளர்கள் அடங்கினர்; இந்தி மொழியின் ஆதிக்கம் தடுத்து நிறுத்தப்பட்டது.

மொழிப் புரட்சிக்கு பின்னர் இரண்டு ஆண்டுகள் உருண்டோடின. பொதுத் தேர்தல் நடைபெற்றது.

தமிழகத்தில் பேரறிஞர் அண்ணாவின் தலைமையில் ஏற்பட்ட கூட்டணி மக்களின் பேராதரவைப் பெற்றது. நடைபெற்ற தேர்தலில் கூட்டணி மகத்தான வெற்றியைப் பெற்றது.

பெரும்பான்மை எண்ணிக்கை கொண்ட தி.மு.கழகம் ஆட்சிக் கட்டிலில் ஏறியது.

பேரறிஞர் அண்ணா முதலமைச்சர் பொறுப்பேற்றார். சென்னை ராஜ்ஜியத்தை 'தமிழ்நாடு' என்று தமிழக சட்டப்பேரவை மூலமாக உலகுக்கு அறிவித்தார்.

இந்தி ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்தினார். இந்தி மொழிக்குத் தமிழகத்தில் இடமில்லை என்று அறிவித்தார்.

இரு மொழிக் கொள்கையே தி.மு.கழக ஆட்சியின் கொள்கை என்று முதல்வர் அண்ணா சட்ட மன்றப் பேரவையில் அனைத்துக் கட்சிகளின் ஆதரவோடு உலகுக்கு அறிவித்தார்.

தமிழர்கள் இன உணர்வு அற்ற நிலையில் வந்தாரையெல்லாம் வரவேற்று அரியாசனம் ஏற்றி, தங்களுக்குத் தாங்களே குழி பறித்துக் கொள்கின்ற போக்கினை எண்ணி வேதனையுற்றார்.

தமிழர்கள் இன உணர்வு பெற வேண்டும்; தமிழ் மொழி இந்தியாவின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக அறிவிக்கப்பட வேண்டும்.

தமிழர்கள் தலைநிமிர்ந்து தரணியில் நிற்கவேண்டும். இவற்றை நிலையாக அடைந்திட உறுதியாகச் செயல்பட்டுவருவதே திராவிட முன்னேற்றக் கழகமாகும்.

இந்த இயக்கத்தின் உறுதிமிக்க தலைவர் தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அவர் எழுபதாவது அகவையில் இன்று அடியெடுத்து வைக்கிறார்.

இந்த வயதிலும் ஓர் இளைஞரைப் போன்று செயல்படுகிறார். கழகப் பணி எதுவானாலும் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று ஆணையிடுவது மட்டுமல்ல; தாமே முன்னின்று நிறைவேற்றியும் வருபவர்.

அவரது வேகத்தோடு நம்மால் செயல்பட முடிவதில்லை. "ஓய்வு" என்ற சொல் அவரது அகராதியில் இல்லை.

எல்லாத் துறைகளிலும் வல்லவராகத் திகழ்கின்ற – வேகமாகச் செயல்படுகின்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் உறுதியாக நின்று செயல்படுவோம்: வெற்றி பெறுவோம்!

அண்ணா நமக்கு அளித்த அற்புதத் தலைவர் கலைஞர் அவர்கள் பல்லாண்டு வாழவேண்டும் – பார் புகழ விளங்க வேண்டும்!

# தன்மானத் தகுதியுள்ள தமிழர்க்கு வாய்த்த திருநாள்!

பொதுச் செயலாளர்
பேராசிரியர்





கழகத்தலைவரும் தமிழினக் காவலருமான கலைஞர் மு.க.அவர்களின் எழுபதாவது ஆண்டுப் பிறந்த நாள் இன்று. தமிழ் நெஞ்சமெல்லாம், தமிழரென்று உணர்ந்தோரெல்லாம் அவருக்கு வாழ்த்து உரைக்கின்றனர்.

கதிர் உள்ளளவும் வாழ்க!
கார் உள்ளளவும் வாழ்க!
கடல் அலைகள் என வாழ்க!
பொதிகைத் தென்றலென வாழ்க!

என்று வாழ்த்திடவே எனக்கும் தோன்றுகிறது. அதனிலும் "என்றுமுள தென்றமிழ்போல் நிலைத்து வாழ்க" என்று வாழ்த்தவே விரும்புகிறேன்.

வடவாரியர் தம் மொழியொன்று இருந்தது, அது சமக்கிருதமாய் செய்யப்பட்டது என்று கூறப்படும் காலத்திற்குப் பல்லாயிரம் ஆண்டுகள் முன்னரே, குமரிக் கண்டத்தில் தோன்றிய மாந்த இனத்தொடும் பிறந்து, நாவலந் தீவெங்கும் பரவி நின்று இயல், இசை கூத்தெனும் முத்தமிழாய் முழங்கி,

செய்யுளும்- நூலும் கொண்டு,
பண்ணும்- தாளமும் ஆர்த்து,
பதமும்- கூத்தும் நிகழ்த்தி

நுண்கலைகள் பலவும் தழைத்ததொரு நிலையில் தனிமொழியாய், தன்னிகரற்ற அறிவுக் களஞ்சியமாய், விரிநீர் உலகில் பரந்த நோக்கத்தின் விளைவிடமாய், புதிய சிந்தனையின் வற்றாத ஊற்றாய், உலகெங்கும் பரவிய நாகரிகத்தின் நாற்றங்காலாய்த் திகழ்ந்தது தமிழ்மொழி வழங்கிய பரப்பு என்பது, இந்த நூற்றாண்டில் தெளியப்பட்டு வரும் உண்மையாகும்.

ஆனால் தமிழ்மொழிக்குத்தான் எத்தனை வகையான இடர்ப்பாடுகள்! நல்ல மரத்திலே பாய்ந்த புல்லுருவி போல, தமிழுக்கு- முதல் இலக்கணம் கண்டவர் எனப்பட்ட அகத்தியர்- வடக்கிலிருந்து வந்ததோர் ஆரிய முனிவராம்! அவரது தலையான மாணவர் என்று கதை கட்டப்பட்ட தொல்காப்பியர் திரணதூமாக்கினி என்னும் வைதிகப் பார்ப்பனராம். ஆரிய வைதிகக் கொள்கையையோ வருண தருமத்தையோ ஏற்காது மறுத்துரைத்த திருவள்ளுவர்- பகவன் என்னும் பார்ப்பனனுக்கும் ஆதி என்னும் புலைச் சிக்கும் பிறந்தவராம். தமிழுக்குப் பெருமை சேர்க்கும் மூலவர்களையே ஆரியத்தின் 'வித்து' என்று கற்பித்துக் கதைகட்டி- அவர்கள் இல்லாமல் தமிழுக்குப் பெருமை கொள்ள நியாயமில்லை, ஆதலின்- அந்தப் பெருமை ஆரியம் அளித்த கொடை- கொடைகூட அல்ல இட்ட பிச்சை என்னும் எண்ணத்திற்கு ஆட்படுத்தும் முயற்சிகள் பலகாலம் தொடர்ந்தது.

அடுத்து, தமிழ் வரிவடிவ எழுத்துக்கள் வரிசையும்- தமிழுக்கெனத் தோன்றியவை அல்ல: சமஸ்கிருத நெடுங்கணக்கில் இருந்து சில எழுத்துக்களை நீக்கிக் கொள்ளப்பட்டவையே என்று ஒரு கற்பனையைப் பரப்பவும் முயற்சிக்கப்பட்டது. தமிழ் எழுத்து வரிசை கண்டே சமக்கிருதம்- எழுத்து வரிசை அமைத்துக் கொண்டதாலேயே சமக்கிருதத்துடன் தொடர்புடைய இந்தோ யூரோப்பிய மொழிகளின் எழுத்து வரிசை போலல்லாமல், வடமொழி எழுத்துவரிசை தமிழ் எழுத்து வரிசை அடிப்படையைக் கொண்டுள்ளது என்று அறிவு கொளுத்தியும், அதை - அவர்கள் ஒப்பினாரில்லை. இந்த உண்மைக்கு மாறாக, ஆரிய மகிமையினால் அடிமை கொள்ளப்பட்ட புலவர் ஒருவரே, "ஐந்தெழுத்தால் ஒரு பாடை உண்டென அறையவும் நாணுவரே" என்றொரு நூற்பா செய்து - தமிழையே தகுதியற்றதொரு மொழியாகக் காட்டவும் துணிந்தார்.

எண்ணற்ற இலக்கியங்களையும், என்றும் எண்ணப்படும் இலக்கணங்களையும் கொண்ட தமிழை மதிப்பிழக்கச் செய்ய முனைந்தோர்- தமிழில் ஏடுகள் பல உண்டெனினும் அவற்றுள் ஒன்றேனும் முதல் நூலாவதுண்டோ என்று நகையாடினர்.

தமிழ்நூல்கள் பலவற்றைத் தமது ஏட்டு மொழியான சமக்கிருதத்தின் வளம் பெருக்கும் நோக்கத்தில் மொழிபெயர்த்து வைத்துக் கொண்டு, மூலத் தமிழ் ஏடுகளையும் ஒரு சிறிதும் மனச்சான்று இன்றி அழித்துவிட்டுப் பின்னர் தாம் மொழிபெயர்த்தனவே மூல ஏடுகள் என்று பறைசாற்றுவதையே ஒரு கலையாக வளர்த்த ஆரியப் பண்டிதர்தம் ஓரவஞ்சனையைப் பரிதிமாற் கலைஞர் முதலானோர் கண்டனம் செய்திருப்பதும்; தமிழ் ஓலைச் சுவடிகளை எல்லாம் சாத்திரத்தில் விதித்தவாறு செய்வதாகக் கூறி தீக்கு இரையாக்குவதையும் நீரோடு போக்குவதையும் முறையாக மேற்கொண்டிருந்த தமிழ் அழிப்புத் திருத்தொண்டை டாக்டர் உ.வே.சாமி நாதய்யர் அவர்களே வேதனையோடு குறிப்பிட்டிருப்பதும், தமிழில் இருந்த மூல ஏடுகள் பல இன்றில்லாததற்கான காரணங்களை உணர்த்தும். ஆனால் தமது நூல்கள் பலவற்றுக்கு மூலம் "தமிழ்" என்னும் உண்மையை மறையச் செய்யவும், தமிழில் உள்ளவற்றிற்குங் கூட மூலம் சமக்கிருதம் என்று காட்டவும் எடுத்த முயற்சிகள் தொடர் கதையாம்.

எப்படியோ- தொல்காப்பியமும், சங்க இலக்கியத் தொகை நூல்களும் செந்நாப் புலவரின் முப்பாலும்- இளங்கோவின் சிலம்பும் - சாத்தனாரின் மணிமேகலையும் - மொழிபெயர்ப்பு என்று சொல்லுவதற்கு வழியற்றுப் போனதால், வடமொழியாளர் வாயிழந்து நிற்கின்றனர்.

தமிழ் மண்ணிலே பிறந்த இசைச் கருவிகளின் துணையொடு வளர்ந்த பண்ணார்ந்த தமிழ் இசையும்; சங்க காலத்து விரலியின் நடைநொடியுடன் பிறந்த நடனத்தால் வளர்ந்த பரதமும்; தென்னகத்தின் சிற்பத் திறன் காட்டும் படிமைகளும்; சிற்சபையில் நடனமிடும் கூத்தன் படிமையும், வழிவழி வளர்ந்த கலையா வண்ண ஓவியங்களும்- மூச்சுப் பயிற்சியை மூலமாகக் கொண்டு வளர்ந்த ஓகமும், இயற்கையைத் தேர்ந்த வகையால் தெளிந்த சித்தர் மருத்துவமும் தமிழொடு பிறந்தவை என்பதை மறைப்பதும், மாற்றிக் கதை கட்டுவதும்; உண்மைக்கு மாறாக சமக்கிருதம் வல்ல அறிஞர்களால் முதன் முதலாகக் கண்டறிந்து விளக்கப்பட்டதாக வரலாறு புனைவதும் அவர்கட்குத் தொழிலாயின.

திருக்கோயில் படிமைகளும் சிற்பங்களும் கோபுர அமைப்பும் வடநாட்டை விடவும் தென்னாட்டில் சிறப்பதேன்?

பரத நடனமும் அதன் பல குருபாரம்பரியமும் தென்னகத்தில், குறிப்பாகத் தமிழ் மண்ணில் ஒளிர்வதேன்?

கருநாடக இசை என்னும் தமிழிசையின் தனித்தன்மை, திராவிட மண்ணில் மேலோங்கி நிற்பதேன்?

நாதசுரத்தில் இசைப்புலமை வல்லவர்களாக விளங்குவோரெல்லாம் பெரும்பாலும் தமிழர்களாக இருப்பதுதான் எதனால்?

சித்தமருத்துவம்- தெற்கில் மேம்பட்டிருப்பது எதனால்?

இவையெல்லாம் தமிழோடும்- தமிழர் அறிவோடும் பிறந்து வளர்ந்தவை என்ற உண்மையாலன்றோ?

இந்த உண்மைகளை மறைத்து வடமொழியே எல்லாவற்றுக்கும் மூலம்போன்று ஆரிய மொழிக்குப் பெருமை தேடுவது யார்? ஏன்? எதற்காக?

வடவரின் சமக்கிருதத்திலிருந்துதான் உலகமும் அண்ட சராசரங்களும்- உயிர்களும்- மற்ற எல்லாமும் பிறந்தன என்னும் பொய்யிலே பிறந்து- பொய்யான பிரமனையும் கற்பித்து, அவன் பெயரால் பொய்யான நால்வருணப் பிறவிகளையும் கற்பித்து, உள்ளதெல்லாம் இல்லை என்னும் பொய்யையே- தத்துவமாக்கி, பொய்யாகவே உயர்வு கொண்டாடும் பொய்யர்களே அன்றோ!

பொய்யான பிறவி கொண்டோர் தமது பிறவி உயர்வைப் பிறர் நம்ப வேண்டுமென்பதற்காக, தமக்கு மட்டுமே உரிமை உடைய மொழி சமக்கிருதம் என்று கைக்கொண்டு பிறர் அறிய முடியாது தடுத்து வைத்ததுடன், மீறினால் தண்டனையும் விதித்தவர்கள் அந்த மொழிக்கு இல்லாத பெருமை எல்லாம் சேர்த்து, அது தேவமொழி- தெய்வமாகவே உள்ளது என்று கதை கட்டி, மற்ற மொழிகளை மிலேச்ச மொழியாக, நீசபாஷையாக இழிவுபடுத்தி- அந்த மக்களைத் தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாக்கித் தாம் மட்டுமே பூசுரர்களாய் - குருமார்களாய் பிறவி எசமானர்களாய் 'அவதாரம்' செய்தவரன்றோ!

ஆம், அதன் பயன்தான் வாளொடு மூத்த குடியாம் வண்புகழ் மூவர் ஆண்ட தென் தமிழ் நாட்டிலும், என்றுமுள தென்றமிழ் நீசமொழியாக்கப்பட்டும், திருக்கோயில்களிலும் திருமண விழாக்களிலும், வாழ்விழந்த வடமொழி 'மந்த்ரம்' என்ற பெயரால்- தந்திரமாக ஆட்சி நடத்தி வருவதாகும்!

வடமொழியான சமக்கிருதத்தை தமக்கு வாழ்வு தரும் மொழியாகப் போற்றி நாளும் கொண்டாடுவோர் யார்? சமக்கிருத மகிமையைப் பேசுவதே தமது ஜன்மசாபல்யமாகக் கருதுவோர் யார்? அவரெல்லாம் இறைப்பற்றில் ஊறி, பக்தியில் தோய்ந்து பரமனிடத்தில் ஐக்கியப்பட்ட நிலையாலன்றோ தேவ பாஷையைப் போற்றுகின்றனர் என்றாவது கூறிக் கொள்ள இடமுண்டோ?

சங்கத் தொகை நூல்கள் பலவற்றுக்குக் கடவுள் வாழ்த்துப்பா இயற்றிச் சேர்த்த பாரதம் பாடிய பெருந்தேவனார் யார்? நால்வர் யார்? நாயன்மார் யார்? பன்னிரு ஆழ்வார் யார்? ஆண்டாள் யார்? காரைக்காலம்மையார் யார்? சேக்கிழார் யார்? கம்பர் யார்? அவர்களெல்லாம் பக்தி அற்றவர்களோ? இறையடியவர்தம் திருவடியையும் தம்முடி மீது தாங்கிடும் பக்தி உள்ளங்கொண்ட புனிதரன்றோ?

அவர்களேயன்றி, இந்தப் பக்தர்கள் எல்லாம் பாடத் திணறும் திருப்புகழ் பாடிய அருணகிரியார் யார்? குமரகுருபரர் யார்? வேதாந்த விளக்கம் தந்த தாயுமானார் யார்? அருட்பெருஞ் சோதியைத் தெளிந்த வள்ளலார் யார்? மாந்தருக்குள்ளே 'சக்தியை' எழுப்பப் பாடிய 'பாரதி' யார்? அவர்களெல்லாம், கடவுளை உணராத கருத்துக் குருடர்களோ? பக்தியிலும் நிறைவு கண்டனரோ, அந்தத் தமிழ் இவர்கட்கு நீச பாஷையாவதுதான் எப்படி? ஒருவேளை உண்மையற்ற இவர்தம் நாவிலிருந்து தமிழ் வெளிப்பட்டால் 'நீச மொழி' ஆகிவிடும் என்று அஞ்சித்தான் அப்படி ஒதுக்குகிறார்களோ?

'தென்னாடுடைய சிவனே போற்றி'- என்று போற்றி உரைக்கப்பட்ட சிவனே, 'உன் நாட்டு மொழி நீச மொழி! என்றும்; 'மாயோன் மேய காடுறை உலகு' என்றது தமிழ் நிலந்தான்- ஆயினும் மாலே நீ பேசிய மொழி மிலேச்ச மொழி! என்றும்; 'சேயோன் மேய மைவரை உலகு' தமிழ்க் குறிஞ்சிதான், ஆனாலும் முருகா- உன் தமிழ் 'சூத்திர பாஷை' என்றும்; அவர்களைத் தெய்வமாக 'உணர்த்திய தமிழையே இழிவுபடுத்தி ஒதுக்கி வைக்கும் செயல் எப்படிப்பட்ட தெய்வப் பற்றின் விளைவு என்பதை, இறைப்பற்றின் பெயரால் வைதிகத்திற்கு அடிமைப்பட்டு எதையும் இழந்து நிற்பவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

தமிழ் மொழியை ஒரு கலப்படமாக்க- திரிபடையச் செய்ய,- தொல்லுலக வழக்கோடு கொண்டுள்ள தொடர்பு அற்றுப் போகச் செய்ய- தெலுங்கும் கன்னடமும் மலையாளமும் போன்று, புதுப்பிறவி எடுக்கச் செய்திட மணிப்பிரவாள நடையை உருவாக்க முனைந்து செயற்பட்டவர்கள்- இன்றும் பிறமொழிச் சொற்களைக் கலப்பதை- ஏதோ தமது வீட்டுக்கு வரும் அதிதிகட்குத் தமது இல்லத்திலேயே எல்லா சுகபோகங்களுக்கும் இடமளித்துதவும் வைதிக தருமத்தைப் போல் கருதிக்கொண்டு- அதை ஒரு பிறவித் தொழிலாகவே- செய்து வருகிறவர்கள் யார்? அவர்கட்குத் துணைபோவோர் யார்? என்பதைத் தமிழர்கள் சிந்திக்க வேண்டும்.

ஆம், இப்படித்தான்- நமது தமிழ் அன்னை, ஆரியத்தின் மகிமையின் பெயரால் இழிவுபடுத்தப்பட்டு உலகியல் உரிமைகளிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளாள்.

"வஞ்சகர், வந்தவர் தமிழாற் செழித்தார்
வாழ்வினில் உயர்ந்தபின் தமிழையே பழித்தார்"

என்னும் புரட்சிக்கவிஞரின் உள்ளக்குமுறல் உணர்த்துவதும் கற்பனையோ?

தமிழ் அன்னைக்கு இழைக்கப்பட்ட அப்படிப்பட்ட அநீதிகள் அத்தனையும் மகனுக்கும் உரியதுதானே! அந்தத் தமிழ் அன்னையின் இந்தநாள் தலைமகனாகத்தானே கலைஞர் கருணாநிதியும் உள்ளார்! என் அன்னைக்கு உற்ற இந்த இழிவும் பழியும் என் இனத்துக்கு உற்ற இழிவே என்றுணர்ந்து அதனைத் துடைத்திடும் கடமையில் தன்னை ஒப்படைத்திட அவரன்றி வேறு எவருள்ளார்?

ஆகவேதான் நமது அன்னைத் தமிழ் போன்றே எத்தனை எதிர்ப்பு அடுக்கி வரினும், அவற்றைத் தாங்கி நிற்கும் ஆற்றலொடு நீயும் வாழ்க! என்று கலைஞரை வாழ்த்துகிறேன் தன்மானத் தகுதியுள்ள தமிழர்க்கு வாய்த்த இத்திருநாளில்!

# வாழ்க பல்லாண்டு!



அய்யா- அண்ணா வழியில்
திராவிட இயக்கத்தைக் கட்டிக் காத்துவரும்
எங்கள் அண்ணன்
முத்தமிழ் அறிஞர் கழகத் தலைவர்

டாக்டர் **கலைஞர்**

அவர்களின்
70-ம் ஆண்டு பிறந்த நாளில் வணங்கி வாழ்த்துகிறோம்!

**கோ.சி.நடராசன்** (செயலாளர்)

**பி.வாசுதேவன்** (வ.செ.மா.துணைச் செயலாளர்)

**கே.வி.பார்த்தசாரதி** (பொதுக் குழு உறுப்பினர்) பூங்கா நகர் பகுதி தி.மு.க.

## இதயமார்ந்த வாழ்த்துக்கள்!

எழு ஞாயிறே!
எழுத்து வேந்தரே!
அறநெறி தவறாது
ஆட்சித் தேர் நடத்திய
அரசியல் வித்தகர்

# கலைஞரே!

இதயமார்ந்த
பிறந்தநாள் வாழ்த்துக்கள்!



**வே.தங்கபாண்டியன்**
செயலாளர்
காமராசர் மாட்டம்

## பல்லாண்டு வாழ்க!

**தமிழ் வாழ-**
**தமிழ் இனம் வாழ**
**தலைவர் நீவிர்**
**பல்லாண்டு வாழ்க**
**என வாழ்த்தும்**

பாத்திரக் கடை க.இராமலிங்கம்
செயலாளர்
47-வது வட்டம்
தலைமை பொதுக்குழு உறுப்பினர்
15, லெட்சுமிபுரம் குறுக்குத் தெரு,
மதுரை-625 001
தொலைபேசி எண் :520 392
ஆர்.செல்வராஜ்

# தமிழினத்தின் சுமைதாங்கி!



அன்று,
திருக்குவளைத் திருக்கோவிலுறை இறைவன்
நற்றமிழ் நம்பியாரூரருக்கு
நெல்சுமந்து கடமை செய்தான்!
இன்று,
திருக்குவளை தந்த தண் தமிழ்த் தலைவ!
கவினுறு காவியமாய்த் திகழும் கலைஞ!
நீ! தமிழினத்தின் சுமைதாங்கியாய்
நின்று விளங்குகின்றனை!
வாழிய நீ!
யாம் வாழும் நாள் வரை வாழிய நீ!
நின் உழைப்பால் வளர்க தமிழகம்!
வாழிய, கலைஞ!
நீலம்ணிமிடற்றொருவன்போல
வாழ்க, நீ!
நீ, புரவலன்!
யாமோ நின்றனுக்கு வாய்த்த பாணன்!
பண்ணும் பாடலும்போல்
நலனும் நற்றொண்டும் பொருந்தி
வளர்க! வாழ்க!



தவத்திரு குன்றக்குடி அடிகளார்

27.5.93

# அரசியலில் கலைஞரின் போர்க்குணம்

துரைமுருகன்



கலைஞருக்கு எழுபதாம் ஆண்டு பிறந்த நாள்! - அவரின் அரசியலுக்கு வயது ஐம்பத்தைந்து ஆண்டுகள். ஐம்பத்தைந் தாண்டுகள் அரசியல் வாழ்வைக் கலைஞர் நடத்தினார்- என்பதை விட

ஐம்பத்தைந்தாண்டுகள் போராட்ட வாழ்வை அவர் மேற்கொண்டார் என்பது தான் உண்மை.

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் போராட்டங்கள் வருவதுண்டு. ஆனால் கலைஞருக்கோ போராட்டமே வாழ்க்கை யாக அமைந்துவிட்டது.

எனவே "போர்க்குணம்" என்பது கலைஞருடைய அரசியல் வாழ்வில் நிலையாக அமைந்துவிட்டது.

வெற்றிகளை ஈட்டுவதற்கும்
தோல்விகளைத் துவளச் செய்வதற்கும்
எதிர்ப்புகளைச் சாய்ப்பதற்கும்
துரோகிகளை வேர் அறுப்பதற்கும், அந்தப் போர்க்குணமே கலைஞருக்குப் பலமாகிவிட்டது.

இந்த வீரத்திற்கு இணையாகக் கலைஞரிடத்தில் விவேகமும் குடி கொண்டதால்தான் இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதிர்ச்சிபெற்ற மூத்த அரசியல் தலைவர் என்கின்ற அங்கீ காரத்தோடும் தமிழினத்தின் ஒரே தலைவர் கலைஞர்தான் என்கின்ற தகுதி யோடும் திகழ்கின்றார்.

கலைஞருக்கு வயதாகலாம். கலைஞ ரின் அரசியல் வாழ்விற்கும் வயது ஏறிக் கொண்டு போகலாம்- ஆனால் அவரின் நெஞ்சில் இளமைக் காலத்தில் பதிந்திட்ட போர்க்குணம் மட்டும் இன்றும் அவரிடத் தில் இளமையோடுதான் இருக்கின்றது.

அந்தப் போர்க் குணத்தை அவர் என்றும் கைவிட்டதில்லை. அந்தக் குணமும் அவரை விட்டு என்றும் அகலவில்லை. எனவேதான் எந்தத் தோல்வியும் எதிர்ப்பும் அவரை வீழ்த்த முடியவில்லை. எந்த வெற்றியும் அவரைத் திசை மாற்றிட முடியவில்லை. எந்த வெற்றி வந்தாலும், முறையாகக் களம் கண்ட வெற்றியாக அது இருக்க வேண்டும் என்பதில் கலைஞர் குறியாக இருப்பார்.

கொள்கையை விட்டுக்கொடுப்பது - அல்லது அந்தக் கொள்கையைச் சமரசத் திற்கு ஆட்படுத்துவது- அதன் மூலம் வெற்றிக்கனியைப் பறிப்பது என்பது கடைந்தெடுத்த கோழைத்தனம் என்பது மட்டுமன்று; கலப்படமற்ற துரோகத்தனம் என்பது கலைஞரின் போர்க்குணத்தில் முளைத்திட்ட கொள்கை முழக்கம்; விளக்கம்.

வளைந்தால் வாழ்வு கிடைக்கும்; குனிந்து நின்றால் கொற்றக்குடைக் கீழ் அமரலாம்; நீக்குப் போக்கோடு போனால் தான் நிம்மதியான வாழ்வு- என்கின்ற கோழைத்தனமான தத்துவங்கள் கலைஞ ரின் அகராதியிலேயே கிடையாது நீதிக்குக் குரல் கொடுப்பது 'நேர்மைக்குப் பரிந்து பேசுவது' ஆணவம்- அகந்தை - மேட்டுக் குடித்தனம் - அதிகாரமிரட்டல் இவைகள் எந்த வடிவில் எங்கிருந்து வந்தாலும் இத்தகைய போக்குக் கொண் டோர் எத்தனைப் பெரிய மனிதர் களாயினும் அவர்களை எதிர்த்திடும் போக்கு இன்னும் கலைஞரிடத்தில் மங்காது இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் கலைஞரிடமிருக்கும் போர்க் குணம்தான்.

நெருக்கடி நிலைமை இந்தியாவில் பிரகடனப்படுத்தி ஜனநாயகத்தின் உயிர் பறிக்கும் செயலை அன்றைய பிரதமர் இந்திராகாந்தி செய்ய முற்பட்டபோது,

"இது தீதானது; சர்வாதிகாரத்தன மானது; பாசிசப் போக்குக் கொண்டது" என்று கண்டித்து, நெருக்கடி நிலை பிரகடனப்படுத்திய இருபத்துநாலு மணி நேரத்துக்குள், முதல் எதிர்ப்பு குரல் கொடுத்துக் கண்டனத் தீர்மானம் வடித்தாரே கலைஞர், அது அவரின் போர்க்குணத்தின் உச்சநிலை எனலாம்.

"ஆட்சி பறிக்கப்படலாம்; தோழர்களை
அடைப்பார்கள் சிறையில் நீண்ட காலம்,
கட்சி முடக்கப்படலாம்- அதன்
சொத்துகள் பறிக்கப்படலாம் - ஏன்
உயிருக்கே உத்திரவாதமில்லை."

-என்றோர் நிலைவரும் என்று எடுத் துரைத்து; நெருக்கடி நிலையை எதிர்க் கும் போக்கைத் தடுத்துவிடலாம், என முற்பட்டோரின் பேச்சையெல்லாம் 'போர்க்குணம் பட்டுப்போன கட்டைகளின் பெட்டைப் புலம்பல்' என ஒதுக்கித் தள்ளி விட்டு நிமிர்ந்து நின்று, மத்திய அரசை எச்சரிக்கை செய்ய வைத்தது கலைஞரின் போர்க்குணமே!

நெருக்கடி நிலையை எதிர்த்திடும்
கொள்கையில் ஒரு சமரசம்.

"நெருக்கடி நிலை குறித்துக் கலைஞர் தீட்டிவிட்ட கண்டனத் தீர்மானங்கள் கிடக் கட்டும் ஏட்டில்; நாட்டில் இனிமேல் இது குறித்து கலைஞரும், கழகமும் பேசாமல் இருந்தால்

சட்டமன்றம் கலைப்பு இல்லை.

மாறாக, மேலும் ஓர் ஆண்டிற்கு அந்த மன்றத்திற்கு ஆயுட்காலம் நீட்டிப்பு வழங் கிடும் மத்திய அரசு.



துரைமுருகன்

வழக்கு எதுவும் வராது.

உங்கள் எதிரிகளை எல்லாம் 'மிசா'வில் இட்டு அழித்து விடலாம்.

இன்னும் எத்தனையோ சலுகைகள் இந்த நிபந்தனைகளுக்கு ஒத்துக் கொள்ளுங்கள். சாடை மாடையாக ஒதுங் கிக் கொள்ளுங்கள்" என்று வீடேறி வந்து பேசிய மத்திய மந்திரிகளைப் பார்த்து

"தவறான முகவரிக்கு வந்துவிட்டீர்கள்; வீழ்வது நாங்களாக இருந்தாலும் வாழ்வது எங்கள் இலட்சியமாக இருக் கட்டும்"

என முழங்கிடும் பாசறைதான் தி.மு.க. உங்கள் விருப்பத்திற்கு எந்தத் தோட்டத்திலாவது தீனி கிடைக்கும் போய் வாருங்கள்."

–என்று கூறிவந்தவர்களை வழியனுப்பி வைத்தவர்தான், சலுகைகளுக்காக, கொள்கையோடு சமரசம் பேசத் தெரியாத கலைஞர்.

"களத்திடை நின்று பெறுவதுதான் வெற்றி.
காலில் விழுவதால்–
ஒருவரின் கருணையால்–
பிறரிடம் கேட்டுப் பெறுவதால்
கிடைக்கும் சலுகைகளுக்குப்
பெயர் வெற்றி அன்று;
அது பிச்சை.

சுத்தவீரனின் வாழ்க்கை வரலாற்றில் இந்த அத்தியாயங்கள் இருக்காது; இருக்கவும் கூடாது. கோழைகளுக்கு வாழ்க்கை உண்டு. வரலாறு கிடையாது. அப்படி இருந்தால் அது இந்த அவமான அத்தியாயங்களின் தொகுப்பாகத்தான் இருக்கும்."

இதுதான் கலைஞரிடத்தில் அரசியல் படிப்போர்க்கெல்லாம் அவர் போதிக்கும் பால பாடம்.

எம்.ஜி.ஆர். உயிரோடு இருந்த காலத்தில் ஒருவர் கலைஞரைப் பார்த்துக் கேட்டார்.

"தி.மு.க.வும் அ.தி.மு.க.வும், ஒன்றாகி, பின்னர் எம்.ஜி.ஆர். உங்களையே முதல்வராக இருங்கள் என்றால் ஒத்துக் கொள்வீர்களா?" என்று கேட்டதற்கு, மின்னலெனப் பதில் சொன்னார் கலைஞர்.

"எம்.ஜி.ஆர். ஒன்றும் அலெக்ஜாந்தரும் அல்ல; நானும் போரஸ் மன்னன் அல்ல;
சுயமரியாதை உணர்வு
தன்னம்பிக்கையின் தைரியம்
அரசியல் ஆண்மைத்தனத்தின் அடையாளம்
போர்க் குணத்தின் வேகம்
இத்தனையும் கலந்தல்லவோ பதிலாக வெடித்துவந்து இருக்கிறது.

கலைஞர், எம்.ஜி.ஆர். ஆட்சியில் பலமுறை சிறைக்குச் சென்று இருக்கிறார்.

நீதிமன்றமும் – அரசும், கலைஞரைப் பார்த்து
ஜாமீனில் போகலாம்.
சொந்த ஜாமீனிலும் போகலாம்.
கையெழுத்துப் போட்டுவிட்டுப் போகலாம்.

என்றெல்லாம் உரைத்தபோது கலைஞரின் போர்க்குணம் கொழுந்து விட்டு எரிந்ததை நாடு பார்த்திருக்கிறது. இறுதியில் அரசாங்கம் பணிந்ததே தவிர கலைஞர் ஒரு நாளும் ஜாமீனில் வெளிவந்ததில்லை.

மிசாக்காலம்–முரசொலியில் கலைஞரின் எழுத்துக்குத் தடை.

"கருணாநிதியின் ஆட்டம் நீண்டநாள் நீடிக்காது. முரசொலி விரைவிலேயே அடங்கும் அல்லது அடக்கப்படும்" என்றெல்லாம் எழுதியும், பேசியும் கலைஞரையும் முரசொலியையும் மிரட்டிப் பணியவைக்க எதிரிகள் முற்பட்டபோது அடங்கிப் போய்விடவில்லை கலைஞர். முடங்கிடவில்லை முரசொலியும்.

மாறாகப் புயல் வேகம் கொண்டு புறப்பட்டுவிட்டது அவரின் போர்க்குணம். அதனால் மிரட்டியவர்களுக்குப் பதிலை எப்படி தருகிறார் பாருங்கள்.

"முரசொலி நான் பெற்ற குழந்தை. அது என் கண்ணெதிரே வீர மரணம் அடையுமானால் நான் புறநானூற்றுத் தாய் போல மகிழச்சி அடைவேனே யல்லாமல் அழுது புலம்பிடமாட்டேன். மாற்றார் ஏடுகள் எழுதியுள்ளது போல முரசொலி அடக்கப்படும் நாள் எனக்குத் திருநாள் – ஆம் தியாகத் திருநாள்."

# முத்தமிழறிஞர் கலைஞர் வாழ்க!

அகவை எழுபதாம் ஆண்டிலடி வைக்கும்
தகவார் கலைஞரவர் தங்கள்– அகமலர்ந்தே
பொன்றாப் புகழ்பெருக்கி பூந்தமிழர் நாடாண்டே,
என்றென்றும் வாழ்க இனிது!

உள்ளம்போல் ஓங்குருவம் ஒவ்வும் படர்நெற்றி
தெள்ளறிவின் நேர்காட்டும், சீர்நயனம்–கள்ளமிலா
வெள்ளை மனக்கனிவை வீசும் நற்கலைஞர்
வள்ளுவர்போல் வாழ்க வரைந்து!

உண்மை விளம்பும் உயர்வுக் கவியரசாய்ப்
பண்பாட்டில் நல்ல பரவுபுகழ் – கொண்டிலங்கும்
அண்ணன் பொற்கலைஞர் ஆற்றல்சால் பேரறிஞர்
தண்டமிழ்போல் வாழ்க செழித்து!

–:பாவலர் இடிமுரசு:–



முரசொலியிலேயே இப்படி எழுதினார். எழுதினார் என்பது தவறு.

புதிய புறநானூறு அல்லவா தீட்டியிருக்கிறார். இந்த வளையாத வயிர நெஞ்சம் படைத்தவர் கலைஞர். அவர் நமக்குத் தலைவர். என்னே நாம் பெற்றபேறு! அதே மிசா காலம்தான்.

இப்படி ஒரு பிறந்தநாள் அன்றும் கலைஞருக்கு வந்தது.

பிறந்தநாள் செய்தி ஒன்று முரசொலிக்கு எழுதுகிறார்.

அதில் ஒரு வரி.

"என் அன்னையைவிட அதிக அன்பை அண்ணா என் மீது பொழிந்தார்" என்று.

இந்த வரிக்கும் தடை, சென்சார், இந்த வரியை வெட்டிவிட வேண்டும் என்று கட்டளை.

"ஏன்?" என்று கேட்டார் கலைஞர்.

"நான் ஒன்றும் பதில் தர வேண்டிய அவசியமில்லை" என்றார் அதிகாரி.

"ஒருவரிதானே; போனால்போகட்டும்" என்று கலைஞரைச் சமாதானம் சொல்லுவதற்காகவா அந்தப் "போர்க் குணம்" அவரின் உள்ளத்தில் எழுபதாண்டுகளாக குடிகொண்டு இருக்கிறது.

"முடியாது" என்ற சொல்லை அகராதியிலிருந்தே எடுக்கச் சொன்னவன் மாவீரன் நெப்போலியன்.

"ஆதிக்கத்திற்கு அடிபணிதல்" என்ற சொற்றொடரை அகராதியிலிருந்து அகற்றிக் கொண்டு வருபவர் நம் தலைவர் கலைஞர்.

எனவே, வந்துவிட்டது போர்க் குணம் அவருக்கு வெற்றி தேடித்தர...

"எழுத்துச் சுதந்திரம் பெற நடைபெறும் ஜனநாயகப் போர் இது."

என்று கைப்படவே எழுதி பிளாக் செய்து அதில் ஒற்றி ஒற்றி ஆயிரத்துக்கும் மேற்பட்ட துண்டுப் பிரசுரங்களை தயார் செய்து கொள்ளுகிறார்.

ஜூன் 2–ஆம் தேதி தணிக்கை அதிகாரி அலுவலகம் முன் உண்ணாநோன்பு இருப்பதென்று முடிவு செய்து அன்று காலை சுமார் 10 மணிக்கு, அண்ணா சாலையில் ஆயிரம் விளக்குப் பகுதியில், ஒரு கையில் கழகக் கொடியேந்தி, மறு கையால் எழுதிய தாள்களை வினியோகம் செய்து கொண்டு, சர்வாதிகாரம் என்று கலைஞர் முழங்க, 'வீழ்க' என்று உடன் வந்தோர் முழக்கமிட, அண்ணா சாலையில் உள்ள அண்ணாசிலை வரையில், நடந்தே சென்றார் கலைஞர் என்பதை இன்றைக்கு நினைத்தாலும் கனத்து போகிறது நமக்கு இதயம்.

கூட்டம் கூடிவிட்டது. போக்குவரத்து ஸ்தம்பித்துவிட்டது. போலீஸ் செய்வது அறியாது திகைத்தது. அரசும் அதிகார வர்க்கமும் ஆடிப்போய், தணிக்கையை தளர்த்தியது. கலைஞர் எழுத்துக்கு அனுமதி கிடைத்தது.

மற்றவர்களாக இருந்தால், ஒரு வரியென்ன ஒரு பக்கமே எடுத்துவிடுங்கள். மீதியை விடுங்கள் என்றுதான் மண்டியிட்டு இருப்பார்கள்.

ஆனால் ஒருவரிக்குக்கூட, வரிப்புலியாய் வெகுண்டெழுந்தார் கலைஞர் என்றால், அந்த 'போர்க்குணத்தின்' வெளிப்பாடு தான் காரணம்.

பிரச்சினைகள் சிறியதா? பெரியதா –என்று கணக்குப் போட்டுப் பார்க்க மாட்டார் கலைஞர். அதில் தன்மானத்திற்குச் சவால் விடப்பட்டு இருக்கிறதா என்று மட்டும்தான் பார்ப்பார்.

ஒரு தலைவனுக்குப் பல குணாதிசயங்கள் இருக்க வேண்டும். அதில் தலையானது 'போர்க்குணம்'
போர்க்குணம் இல்லாத அரசியல்வாதி
கூர் இல்லாத ஈட்டி
வேர் இல்லாத மரம்
உயிர் இல்லாத உடல்

இந்தச் சித்தாந்தத்திற்கு உட்பட்டவர்களே கலைஞருக்கு உடன் பிறப்புக்களாக இருக்க முடியும்.

கலைஞரே! எங்கள் உயிரே!
ஒரு முறை நீங்கள் எழுதியதுபோல்
"கோழைகளுக்கு முதுகெலும்பு வழங்குவதற்கும்
வாழை மரங்களை வயிரம் பாய்ந்த தேக்குகளாக்குவதற்கும்"

நீங்கள் வாழ வேண்டும்; இன்னும் பல்லாண்டு பல்லாண்டு– என வாழ்த்தி நிற்கிறோம்.

# எழுபதாம் ஆண்டை எட்டும் நீங்கள்
# நூறையும் தாண்டி சீருடன் வாழ்க!








நின்றால்... நடந்தால்... நிமிர்ந்தால்...

அமர்ந்தால்... கண் அயர்ந்தால்...

நினைவுகளும் கனவுகளும் தமிழ்,

தமிழினம், தமிழகமென்றே வாழும்

தத்துவமே! எங்கள் வேதப் புத்தகமே!

முத்தமிழறிஞர்

## கலைஞர் அவர்களே

எழுபதாம் ஆண்டை எட்டும் நீங்கள்

நூறையும் தாண்டி

சீருடன் வாழ்க! என

வாழ்த்துகின்றோம்!



**கே.கே.வீரப்பன்** எம்.பி.,

(சேலம் (தெற்கு) மாவட்ட செயலாளர்)

மு.பழனிவேலன் (மாவட்ட அவைத் தலைவர்)

ஜே.கே.கே.சுந்தரம் (சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினர்)

பி.கணேசன், என்.சுப்பையன், வி.முத்து

(மாவட்ட துணைச் செயலாளர்கள்)

எல்.கே.இராமு, டாக்டர் கே.பி.ராமலிங்கம்

(தலைமை செயற்குழு உறுப்பினர்கள்)

மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், இளைஞரணியினர், மாணவர் அணியினர், மகளிரணியினர், தொண்டரணியினர், தொழிலாளர் அணியினர்.

# புயலுக்கு வயதில்லை தலைவா-நின் புகழுக்கு வரம்பில்லை!

வை.கோபால்சாமி எம்.பி.



பொழுது புலரும்; பொன்யுகம் விடியும்! பழுதுகள் அகலும்; பனியினி விலகும்! மலரும் புதுமைகள்! மகிழ்வே அனுதினம்! எழுகதிர் என நிதம் புவியுனைத் தொழுதிட எழுபது வயதினை எய்திய தலைவனே!

உள்ளத்தில் – உணர்வினில் –சிலிர்ப்பினை அளித்தெமை இயக்கிடும் தமிழே! இமைப் பொழுதெனும் நினைப்பினில் அகலாது உயிர்ப்பினை வழங்கியெம் அகத்தினால் சுடரும் அற்புத ஒளியே! உழைப்பெனும் மொழிக்கு ஒரு தனிப் பொருளே! உடன் பிறப்புகளின் உயிரினிற் கலந்து இனித்திடும் உவப்பே!

“வாழ்க கலைஞர்!<br>
வாழ்க தலைவர்!<br>
வாழ்க! வாழ்க!”

என்று வையத்துத் தமிழர் எல்லாம்வாழ்த்திக் களிக்கின்றோம்! வாழ்நாளில் நின் கண்ணசைப்பின் திசை நோக்கிக்காவியங்கள் படைப்போம்! நின் விழிச்சுடரின் ஒளியினில் இலட்சிய வழி நடப்போம்!

கோடி இன்னல்கள் குறுக்கிட்ட போதிலும் கொஞ்சமும் தளர்ச்சி கொண்டிட மாட்டோம்!

சஞ்சலக் காற்றில் சலனம் கொள்பவன்– சங்கத் தமிழே! நின் தம்பியருள் இல்லை! சபலங்கள் எம்மைச் சாய்த்திட மாட்டா! சருகென நினைத்து அதை மிதித்து யாம் நடப்போம்! வருகின்ற நாளில் உன் திருக்கரம் தன்னில் தாய்த்திரு தனிக் கொற்றம் தருவோம்! உன்னை வீழ்த்த நினை.த்தவர் வீழ்ந்து கிடக்கிறார்!

சந்தனப் பொதிகையின் தென்றலும் பொருநையும் சாட்சியமாக நாங்கள் சபதம் ஏற்கிறோம்! உன்னைப் பின்பற்றி நிற்கப் பெற்றிட்ட பேறொன்று போதும்; பிணமான போதிலும் பிரிதேதும் நாடோம்!

தமிழ்க்குலம் தன்னைச் சாதிச் சகதியில்– சனாதனச் சேற்றில் – சாய்த்திட்ட சகாப்தத் தைச் சாய்த்தே காட்டுவோம்! இந்தி ஏகாதிபத்திய இழிவினில் வாடும் நிலையினை மாற்றுவோம் ! வந்தேறிகளாய் நம் வாழ்வைப் பறித்து வல்லமை பேசிடும் வர்ணாஸ்ரமத்தின் வாலை நறுக்குவோம்! தமிழ்நாட்டைச் சூழ்ந்த நாசகாரர்கள் வேஷம் கலைந்து விரைவினில் வீழ்வர்! வெறியாட்டம்போடும்வீணரை வீழ்த்தி வெற்றித் திருமகனே! நின் கொற்றக் கொடியை விரைவில் ஏற்றுவோம்!

ஊழித் தீயாய் உழைத்து நீவளர்ந்தாய்! நின் உள்ளம் நோக ஒரு நொடி கூடச்சகித்திட மாட்டோம்! விம்மிடும்இதயத்தில் வெளிப்படும் உணர்வுகளை அணுவளவேனும் மிகைப்படுத் தாமல் ஆருயிர்த்தலைவா! அளிக்கிறோம் உறுதி! அங்குலம் கூட அடுத்தவர் சதிக்கு நாம் ஆட்படமாட்டோம்! உனை அழித்திட நினைப்பவர் முகத்தினில் மிதிப்போம்! சதிச்செயல் புரிந்திடும் சகுனிகள் நடுங்கச் சண்டமாருதமாய் சாதனை புரிவோம்! தமிழ் என்றால் இளமைதான்! தாயென்றால் பசுமைதான்! தலைவா! நீ என்றென்றும் தனிப் பெரும் சகாப்தம்தான்! இனிப்பிறன் எவனும், நினைப்பினில் கூட உன் நிழலைத் தீண்டிடல் நிச்சயம் இல்லை!

வெற்றி மாலைகள் தயாராகின்றன! வீர காவியங்கள் உருவாகின்றன! காவிய நாயகர் கலைஞரின் தலைமையில் கழகத்தில் தொண்டனாய் வாழ்வதே எங்களின் வாழ்க் கைப்பேறு! வசதிகள் அல்ல; வாய்ப்புகள் அல்ல! வளம்பல பெற்றிடும் நினைப்பும் எம்மிடம் நிச்சயம் இல்லை!

உந்தன் வாழ்வு தமிழின் வாழ்வு! உந்தன் வாழ்வில் எங்கள் வாழ்வு மட்டுமல்ல; நாடு விட்டு நாடு சென்று நற்கதியின்றி நிர்க் கதியாக நிற்கிறானே நாடாண்ட தமிழன், அவன் வாழ்வில் நம்பிக்கை இருக்கிறது வையத்தில் எங்கெல்லாம் தமிழன் இழிவுக்கு ஆளாக்கப்படுகின்றானோ அங்கே அவன் இரத்தத்தில் சூடேற்றும் இனமானச் சிலிர்ப்பாக எங்கள் இலட்சியத்தலைவனே நீ இலங்குகின்றாய்!

“போர்க்களத்தில்” பள்ளி நாளில் புகுந்தவன் நீ! களங்களில் காவியங்கள் பல வற்றைப்படைத் தவன் நீ! களங்கள் அமைத்துக் கழகத்தை வழிநடத்தும்காவல் தெய்வம் நீ! நின் காலடியில் நின்று களத்தில் பணியாற்றிக் காராக் சிரகம் செல்வதை வாழ்க்கைப் பாக்கிய மாகக் கருதி வாழ்கின்ற கணக்கற்ற தம்பியர்கள் காத்து நிற்கிறோம். ஜனநாயகத்தில் மக்கள் ஆட்சித் தத்துவத்தின் பொருள் தெரியாப் புல்லர் கூட்டம் உன் ஆட்சியைக் கலைத்த போது, மாயையில் சிக்கி மயங்கித் தடுமாறியவர்கள் இதோ, தடம் பிடித்து வந்துன்னைச் சரணடைந்து நிற்கின்றார். எழுபதிலும் எழும் கதிராய்ச் சோர்வின்றிச் சுழன்று வரும்சூரியனே! உனக்கு மூப்பில்லை! பூகம்பங்களைப் புரட்டி வரும் புயற்காற்றே உனக்கு வயதில்லை! உன் புகழுக்கு வரம்பும் இல்லை!



உன் கரங்களில் கொற்றக்குடையை– வெற்றிக் கொடியை–வழங்காமல் எங்கள் விழிகளுக்கு உறக்கம் இல்லை! தமிழர் வேதனைக்கு மருந்தும் இல்லை! எனவே நம்பிக்கையோடு பிறந்திருக்கும் இந் நாளில் நாடெங்கும் எழுச்சி! மக்கள் எல்லாம் வாழ்த்துகின்றார்! அவ் வாழ்த்திலே எங்கள் வாழ்வும்இருக்கின்றதென்று வையத்துத் தமிழர் எல்லாம்வாழ்த்துகின்றார்! வையை மணலினும், பொருநைப் புனலினும் பெருகி நீ வாழ்க!

# தாண்டுக நூறாண்டுகளை!

கலைஞருக்கும் கலைஞர் அவர்
கவிஞருக்கு கவிஞர்.
தலைவருக்குத் தலைவர் அவர்
தொண்டருக்குத் தொண்டர்
விலையுயர்ந்த மேதையவர்
வித்தகத்தின் முதன்மை
தலை கொடுப்பான் தமிழுக்காய்
தனைத்தருவான் நாட்டிற்காய்!

சாதனைகள் அவனுக்கே!
சாதுரியம் அவன் சொத்து
வேதனைகள், சோதனைகள்
வேண்டுமட்டும் உணர்ந்த மகன்
போதனைகள் போலிகளே
பொய்யர்களின் சொத்தென்னும்
நாதனவன், நாணயத்தின்
நல்லிணக்கம், பண்பிலக்கம்.

வெறுப்பவரை வெறுத்திடற்கு
வரமறுப்பான், வஞ்சகரைப்
பொறுத் தவரை பொறுமையெனும்
பொற்கரத்தால் அணைத்திடுவான்
மறுத்தலிலை மாற்றாரை
மதித்திடுவான், மேற்செல்வான்
உறுத்துகின்ற சூழ்நிலையை
உருமாற்றி வளர்ந்தவனாம்!

பொதுவாழ்வு அவனுக்கு
பெரும் பயிற்சிக் களம் என்க!
மெதுமெதுவாய் ஐம்பதற்கும்
மேற்பட்ட ஆண்டுகளை
புது புதிதாய் பெற்றிட்டான்
பூரிப்பில் எழுபதினைக்
கத கதப் பாய்க் கண்டிட்டான்
தாண்டுக நூறாண்டுகளை.

பா. [illegible] 3/6/93

கவிஞர் நாஞ்சிலார்